Registered No. M. 4018.

உ

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 6 | October 1944 | No. 10


| விஷயசூசிகை | பக்கம் |
| --- | --- |
| வைத்தியச்செய்தி | 1 |
| யோகரத்நாகரம் | 179-184 |



சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
,, ,, ½-க்கு ரூ 4
,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

**Pandit, S. NARAYANA IYENGAR.**

**Editor and Publisher**

No 2, Police Station West Lane, Madura.


காபிரைட்]

[விலை **0—3—0**

கடேஸ்வர் பிரஸ், மதுரை—44.

# வைத்தியச் செய்திகள்.

**திருச்சி ஆயுர்வேத ஸபா**—1944ஞ் செப்டம்பர்மீ 17உ ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்கு ஷை ஸபையின் விசேஷ அவசரக்கூட்டமொன்று திருச்சி ஆயுர்வேத யூனியன் கட்டிடத்தில் ஸ்ரீ L. V. மஹாதேவ சர்மா வைத்ய விசாரத் ஓ ஆயுர்வேத சிரோமணி அவர்களின் தலைமையில் கூடிற்று. அவ்வமயம் சென்ற 19 வருஷங்களாக நடந்துவரும் சென்னை இந்திய வைத்தியக்கல்லூரி மூடப்பட்டிருப்பதைக் குறித்து அடியிற்கண்ட தீர்மானம் ஏகமனதாகச் செய்யப்பட்டது.

"சென்னை இந்திய வைத்தியக் கல்லூரியிலுள்ள மாணவர்கள் கல்லூரிக்கு வராமலிருந்தகாரணத்தை முன்னிட்டு அவ்வைத்தியக் கல்லூரியை சர்க்கார் மூடிவிட்டதைக் குறித்து இச்சபை வருத்தமடைகிறது. சர்க்கார் ஷை உத்தரவை ரத்துசெய்து, பக்ஷபாதமற்ற ஒரு கமிட்டியை நியமித்து மாணவர்களின் குறைகளைத்தீர்க்க வேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது. தவிர மாணவர்களை கல்லூரிக்குத் திருப்பிச்செல்லும்படியும் கேட்டுக்கொள்கிறது. கடைசியாக மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட எல்லாவித தண்டனைகளையும் உடனே ரத்துசெய்யுமாறு கல்லூரித்தலைவரை வேண்டுகிறது. ஷை தீர்மானங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டது."

**திருச்சி ஆயுர்வேத ஸபா**—1944ஞ் செப்டம்பர்மீ 30உ சனிக்கிழமை மாலை 5-மணிக்கு ஷை ஸபையின் மாதாந்தக் கூட்டம் திருச்சி ஆயுர்வேத யூனியன் கட்டிடத்தில நடைபெற்றது அதற்கு ஸ்ரீ L V மஹாதேவ சர்மா வைத்ய விசாரத் ஓ ஆயுர்வேத சிரோமணி தலைமை வகித்தார். பகவான் தன்வந்தரி பிரார்த்தனைக்குப்பிறகு சென்ற மீட்டிங்கின் நடவடிக்கை வாசிக்கப்பட்டது அதன் பின் வைத்ய வாசஸ்பதி ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்கள் "அதந்திரக சிகித்ஸை" யைப்பற்றி ஸம்ஸ்கிருதத்தில் உபன்யஸித்தார், வந்திருந்த மெம்பர்களுக்குள் சர்ச்சை நடந்தது, கடைசியாக அக்கிராஸனர் தலைமைப் பிரசங்கம் செய்ததும் வந்தனோபசாரத்துடன் கூட்டம் மாலை 7-மணிக்கு இனிது முடிவுற்றது.

T. S. ஈஸ்வரன்,

காரியதரிசி.

மானது. கெட்ட முகக்களை, பூதபிசாசங்கள், [illegible] விஷம், [illegible] இளைத்தல், இவைகளைப்போக்கும். குறிப்பு—குழந்தைகளுக்குப் பால்போட்ட உதவும் சங்கு எல்லாரும் அறிந்ததே, அதில் இரண்டு வகையுண்டு, வலம்புரிச்சங்கு, இடம்புரிச்சங்கு என அவைகளுக்குப்பெயர். சங்கின் அடிபாகத்திலுள்ள தடித்த முகத்தில் சுற்றுவளைவான கோடுகள் இருக்கும். அவைவலதுபக்கமாகச்சுற்றி வந்தால் அது வலம்புரிச்சங்காகும். இதுக்கு விலைபதிகம், இடதுபக்கமாகக் கோடுகள் சுற்றிவந்தால் அது இடம்புரிச்சங்காகும். இது குறைந்த விலையுள்ளது, இவைகளில் சேராத இனமும் உண்டு. சங்கைப்பஸ்மம் செய்து உள்ளுக்கு உபயோகிக்கவேண்டும். பச்சையாகக்கண் நோய்களுக்கு உபயோகிக்கவேண்டும். இதைத்தனித்தும் கூட்டு மருந்துகளுடன் சேர்த்தும் உபயோகிக்கலாம். முக்கியமாக கிராஹணீ நோய்களிலும், க்ஷய நோயிலும் உபயோகப்படுகின்றது. சங்கைக்கல் உரலில் போட்டு இடித்துப்பொடிசெய்து பிறகு கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழ ரசம்சேர்த்து அரைத்து பில்லைதட்டிக் காயவைத்துக் கஜபுடமிட பஸ்மமாம். சங்கு பல மருந்துகளில் சேருகின்றது. படலம் முதலிய கண்நோய் மருந்துகளிலும் பச்சையாகச்சேர்ந்து உபயோகப்படுகின்றது. பூநாகம்—இனி பூநாகம் என்ற மண் உண்ணிப்பூச்சியிலிருந்து ஸத்வம் எடுக்கும் முறை சொல்லப்படுகின்றது. குறிப்பு—ஈரக்கசிவான மண்ணை வெட்டினால் அதில் சுமார் 4, 5, அங்குல நீளமுள்ள மண்உண்ணிப்பூச்சிகளைப்பார்க்கலாம். செம்மண் பூமியில் காணப்படும் இப்பூச்சிகள் சிகப்பு நிறமாக இருக்கும். இதற்கு குணம் அதிகம், மற்றப்பூச்சிகள் வெளுப்பாக இருக்கும், அவற்றிற்குக் குணம் குறைவு, இந்தப்பூச்சிகளை எடுத்து அதன் வயிற்றிலுள்ள மண்ணை விலக்கவேண்டும், பசும்பாலில் அவைகளைப்போட்டால் பாலில் மண்ணைக்கக்கிவிடும், இவ்விதம் இரண்டு மூன்று தட்வை செய்ய பூரா மண்ணும் விலகிவிடும், பிறகு அவற்றை எடுத்துக்கொள்ளவும், இப்பூச்சிகள் மிகவும் உபயோகமுள்ளவை, இவற்றை வெய்யிலில் காயவைத்து ஓர் மண் சட்டியிலிட்டு அடுப்பேற்றி வறுக்க அவைகருகிவிடும், அதை எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடிசெய்து சீசாவில் பத்திரப்படுத்தி பணவிடை தகுந்த அனுபானத்தில் கொடுக்க சனி [illegible] சைத்

தியம், விலகும், குழந்தைகளின் மாந்தம், கணை, ஆகிய வைகளும் விலகும், இனி இதன் ஸத்வம் எடுக்கும் விதம் சொல்லப்படுகிறது செம்மண் தரையில் இருக்கும் பூநாகங்கள் மூப்பது கொண்டுவந்து (சுத்திசெய்து) அவைக் கல்வத்திலிட்டு அதற்குச் சமயிடையாக (மொத்தத்தில்) குக்கில், கொம்பரக்கு, சிலந்திப்பூச்சி, இதையே எட்டுக்கால்பூச்சி என்பர், சாதாரணமாக வீடுகளில் சுவர் ஓரம் முதலிய இடங்களில் கூடுகட்டும் குணமுள்ளது. மீன், பிண்ணாக்கு, வெங்காரம், எடுத்துச் சேர்த்து கண்ணீர்விட்டு நன்றாக அரைத்து. பிறகு குகையிலிட்டு துருத்திகொண்டு ஊத தாமிர நிறமான சத்து மணிபோல வெளிவரும். இவ்விதமே மயில்தோகையிலிருந்தும் சத்துவம் எடுக்கலாம். இனி இதன் குணம் சொல்லப்படுகிறது— பூநாக சத்துவம் குளிர்ச்சியானது, குஷ்டம், விரணம் இவைகளைப் போக்கும். ஷெடி சத்தவத்தை ஜலத்தில் போட்டு அந்த ஜலத்தை மாத்திரம் குடிக்க ஸ்தாவர ஜங்கம விஷங்களனைத்தும் போம். அந்த சத்துவத்தால் கிண்ணி செய்து அதில் பாதரசத்தை விட்டு வைக்க அந்த ரஸம் அக்னிக்கு ஓடாது. இவ்விதமே மயில்தோகை சத்துவத்தின் குணத்தையும் அறியவேண்டும். குறிப்பு—இங்கு சொல்லிய படி சத்துவம் எடுப்பது சுலபமே. எல்லாவற்றையும் நன்றாக அரைத்தபிறகு வெய்யிலில் காயவைத்துக் கொள்ளவேண் டும். குகையில் ஊதும்பொழுது முதலில் புகைவரும், கைவிடாமல் ஊத சிகப்பு ரவைகள் வெளிவரும், சுவல்பமாக இருப்பதால் பலதடவைகள் செய்து சத்துவங்களை சேகரிக்கவேண்டும். இனி கர்ப்பூர சுத்தி சொல்லப்படுகிறது. பசுப்பால், திரிபலை கஷாயம், கரிப்பான் ரசம், இவைகளை சம அளவு எடுத்து கர்ப்பூரத்தை ஓர் யாமம் அரைக்கச் சுத்தியாகும். இனி வெங்காரம் சுத்தி சொல் லப்படுகிறது. சுத்தி செய்யாத வெங்காரம் வாந்தி, பேதி, ஆகிய வைகளைச் செய்யும். ஆகவே சுத்தி அவசியம், பசுஞ்சாணியில் வெங்காரத்தைப் பொதிந்து வைத்து ஒரு யாமம் கழித்து எடுத் துக்கழுவி உலர்த்தச் சுத்தியாகும். இதன் குணம்—அக்னி பலம் கொடுக்கும், தங்கம் வெள்ளி இவைகளைச் சுத்திசெய்யும், விஷ தோஷத்தைப்போக்கும், இருதயத்திற்கு பலம் கொடுக்கும், வாத கபரோகங்களைப் போக்கும். இனி வத்ஸநாபி சொல்லப்படுகிறது

இதன் சுத்தி—வத்ஸநாபியைச்சிறு துண்டுகளாக்கி ஓர் மெல்லிய வஸ்திரத்தில் கட்டி அதை கோமூத்திரத்தில் போட்டு வெய்யிலில் மூன்றுநாள் வைக்கவும், பிரதிதினம் பழைய கோமூத்திரத்தை விலக்கிப் புதிய கோமூத்திரம் விடவும்: நான்காவது நாள் எடுத்து ஜலத்தில் கழுவி இலேசாக வெய்யிலில் காயவைத்துக்கொள்ளவும். சுத்தியாகும். வேறு முறை—முன்போல துண்டுகளாக்கி வஸ்திரத்தில் முடிந்து வெள்ளாட்டுப்பாலில் தோலா யந்திரமாகக்கட்டி ஒரு யாமம் எரிக்கச் சுத்தியாகும். வெள்ளாட்டுப்பால் கிடைக்காவிட்டால் பசும்பாலை எடுத்துக்கொள்ளவும். வேறு முறை—வத்ஸநாபியை துண்டுகளாக்காமல் அப்படியே எருமைச்சாணியில் புதைத்து உமி புடத்தில் ஒரு யாமம் எரித்து எடுத்துக்கழுவி உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும் வேறு முறை—முன்போல துண்டுகளாக்கி துணியில் கட்டி பாதிஜலம் கலந்த பாலில் டோலாயந்திரமாக ஓர் யாமம் எரிக்கச் சுத்தியாகும். இனி விஷமாரணம் சொல்லப்படுகிறது—வத்ஸநாபிக்குச் சமயிடை டங்காரமும், இரண்டு பங்கு மிளகும் சேர்த்துப்பொடிசெய்து கொள்ளவும். இதன் குணம்— ரசாயனம், பலத்தைக்கொடுக்கும், வாத கபநோய்களைப் போக்கும், காரம், கசப்பு, துவர்ப்பு குணமுள்ளது, மதத்தைச்செய்யும், ஆரோக்யம் கொடுக்கும், வியாபி குணமுள்ளது, குளிர்ச்சியைப்போக்கும், எரிச்சலைக்கொடுக்கும், குஷ்டம், வாதரக்தம், இவைகளைப்போக்கும், அக்னிமந்தம், சுவாஸம், காஸம், பிலீஹோதரம், பவுந்தரம், கன்மர், பாண்டு, விரணம், மூலம், இவைகளைப்போக்கும். இனி கௌரீபாஷாண வகை சொல்லப்படுகிறது. கௌரீபாஷாணம் இருவகையாகும். வெளுப்பு நிறமுள்ளது ஓர் வகை. சிகப்புநிறமுள்ளது இரண்டாவது வகை முதல்வகையானது சங்குபோல வெளுப்பாக விருக்கும், மாதளம்பூ நிறமுள்ளது பிந்தியவகையாகும், இவற்றுள் முந்தியவகை அதாவது வெள்ளைப்பாஷாணம் செயற்கை முறையால் உண்டாகும், சிகப்புபாஷாணம் மலைகளில் இயற்கையாக உண்டாகும், இந்த இரண்டிற்கும் விஷகுணமுண்டு. ரசசித்தியில் உபயோகப்படுகின்றன. [illegible]ணம், அந்தம், விகடம், ரக்தசூர்ணம், என்ற பெயர்கள் இவைகளுக்கு உண்டு. இவற்றின் குணம்—ரஸபந்தம் செய்யும், பசையுள்

ளது, தோஷங்களைப்போக்கும், ரஸத்திற்கு வீரியத்தைக் கொடுக்கும், இவற்றின் சுத்தி—கோரைக்கிழங்கு கஷாயத்தில் தோலாயந்திரமாகப் பாஷாணத்தை வஸ்திரத்தில் கட்டி 24 மணி சிறு தீயிட்டு எரிக்கச் சுத்தியாகும். வேறு முறை சுத்தி—சாஸ்திரப்படி வெள்ளைப்பாஷாண சுத்தி சொல்லப்படுகிறது. வெள்ளைப்பாஷாணத்தைப்பொடிசெய்து ஓர் துணியில் கட்டி சுண்ணாம்பு நீரில் ஒருநாள் தோலா யந்திரமாக எரித்து எடுக்கச் சுத்தியாகும். வேறு முறை சுத்தி—வெள்ளைப்பாஷாணத்தைப் பொடிசெய்து ஓர் வஸ்திரத்தில் தளரக்கட்டி, காடி வெங்காரத்தண்ணீர், பசுப்பால், ஆட்டுமாமிச கஷாயம், இவைகளில் ஏதாவது ஒன்றில இரண்டு நாழிகை தோலா யந்திரமாக எரிக்கச்சுத்தியாகும். "உல்லி பாஷாணம்," "மல்லம்" என்ற சொற்கள் வெள்ளைப்பாஷாணத்தைக் குறிக்கும். வாதரோய், கபரோய், சைத்தியம், இவைகளில் இதை உபயோகிக்கின்றனர். இனி உப விஷங்கள் சொல்லப்படுகின்றன. 'எருக்கம்பால், கள்ளிப் பால், கலப்பைக்கிழங்கு, அலரி, குன்றி, அபினி, ஊமத்தை, ஆக இந்த எழு வஸ்துக்களும் உபவிஷங்களெனப்படும். இனி வேறு மதம் சொல்லப்படுகிறது. எருக்கு, கள்ளி, கலப்பை, குன்றி அலரி, எட்டிக்கொட்டை, ஊமத்தை, அபினி, நேர்வாள விதை, ஆக இந்த ஒன்பது வஸ்துக்கள் உப விஷங்களெனப்படும், இனி எருக்கின் குணம் சொல்லப்படுகிறது. எருக்கு இருவகையாகும், வெள்ளைப் புஷ்பமுள்ளது வெள்ளை எருக்கு எனப்படும், சாதாரண வகை எருக்கு எனப்படும், இவ்விரண்டும் வியாபி குணமுள்ளது, வாதரோய். குஷ்டம், அரிப்பு, விஷம், பிலீஹை, குன்மம், மூலம், யகிருத், கபரோய், மகோதரம், கிருமி, இவைகளைப்போக்கும், இனி கள்ளி (சதுரக்கள்ளி)யின் குணம் சொல்லப்படுகிறது—பேதியைக் கொடுக்கும், தீக்ஷ்ண குணமுள்ளது, தீபனம், காமாலை, குரு, சூலம், அஷ்டீலிகா என்ற வாதரோய், வயிற்று உப்புசம், குன்மம். வீக்கம், மகோதரம், வாதரோய், யகிருத்ரோய், பிலீஹை, குஷ்டம், பைத்தியம், கல்லடைப்பு, பாண்டு, இவைகளைப் போக்கும் எருக்கு கள்ளி இவைகளில் பால் இயற்கையில் சுத்தமானது, இனி கலப் பைக்கிழங்கு சொல்லப்படுகிறது, அதை கிழங்கை கோமூத்திரத்தில் ஒரு நாள் ஊரப்போட சுத்தியாகும். இதன் குணம்—வியாபிகுண

முள்ளது, குஷ்டம், வீக்கம், மூலம், விரணம், சூலம், இவைகளைப்போக்கும், தீக்ஷணமானது, உஷ்ணமானது, கிருமிகளைப்போக்கும். இலகுவானது, பித்தம் செய்யும், கர்ப்பச்சிதைவு செய்யும், இனி குன்றுமணி சொல்லப்படுகிறது—குன்றுமணியை காடியில் போட்டு ஒரு யாமம் எரிக்கச் சுத்தியாகும், இதன் குணம்—இலகுவானது, குளிர்ச்சியானது, பசையுற்றது, இளகச்செய்யும் குணமுள்ளது, சுவாஸம், காஸம், இவைகளைப் போக்கும், கொஞ்சம் உஷ்ணமானது, தாதுபுஷ்டி செய்யும், குஷ்டம், அரிப்பு, சிலேஷ்மநோய், பித்தநோய் விரணங்கள், இவைகளைப் போக்கும். இனி அலரி சொல்லப்படுகிறது அலரிவேரை வத்ஸநாபிபோல சுத்தி செய்யவும், தோலாயந்திரமாக்கட்டி பசும்பாலில் எரிக்கச் சுத்தியாகும். அலரி இரண்டுவிதமாகும். வெள்ளை அலரி, சிகப்பு அலரி என இருவகைப்படும். இவைகளின் குணம்—கண்நோய்கள், குஷ்டம், விரணம், இவைகளைப்போக்கும், இலகுவானது, உஷ்ணமானது கிருமி, அரிப்பு, இவைகளைப்போக்கும், உள்ளுக்குச் சாப்பிட்டால் விஷத்தின் குணம் காட்டும். எட்டிக்கொட்டை சொல்லப்படுகிறது, எட்டிக்கொட்டையைக் கொஞ்சம் நெய்விட்டு வறுக்கச் சுத்தியாகும். இதன் குணம்— கசப்பு காரமுள்ளது, தீக்ஷணம், உஷ்ணம், வாதகபஹரம், நாய்விஷம், பைத்தியம், இவைகளைப் போக்கும், மதம் செய்யும். நேர்வாளவித்து—இது குருவானது, கசப்பானது, வாந்தியைச் செய்யும், ஜ்வரம், குஷ்டம், இவைகளைப் போக்கும், உஷ்ணமானது, வியாபி குணமுள்ளது. விரணங்கள், கபநோய், அரிப்பு, கிருமிகள், விஷம், இவைகளைப் போக்கும்.—இதன் சுத்தி—நேர்வாளத்தின் மேல்தோலையும், பருப்பை உடைத்து உள்ளிருக்கும் தோலையும், நாக்கையும் விலக்கிப் பிறகு எருமைச்சாணியில் பொதித்துவைத்து மூன்றுநாளைக்குப்பிறகு எடுத்து வெந்நீரில் கழுவி, ஓர் வஸ்திரத்தில் மூடி கல்வத்தில் வைத்து வஸ்திரத்தோடு அரைத்துப்பிறகு அந்த விழுதை மாத்திரம் எடுத்து புதிய மண் சட்டியில் அப்பி இவ்விதம் அதிலுள்ள எண்ணை போகும்படி செய்து அந்தத் தூளை எலுமிச்சம்பழ ரசத்தில் போட்டு எடுக்கச் சுத்தியாகும். வேறு முறை சுத்தி—நேர்வாள வித்தை முன்போல தோல் நாக்கையும் விலக்கி ஓர் வஸ்திரத்தில் முடிந்து சாணி நீரில்

போட்டு யாமம் எரிக்கச்சுத்தியாகும். இனி ஊமத்தம்வித்து சொல்லப்படுகிறது—ஷை வித்தை கோமூத்திரத்தில் நான்குயா ஊறவைத்து எடுத்து உலர்த்தி மேல்தோல் நீக்கிவிட சுத்தியா இதன் குணம்—மதம் செய்யும், நிறத்தைக்கொடுக்கும், அ வாயு, இவைகளைச்செய்யும், சுரம், குஷ்டம், இவைகளைப் போக்கு உஷ்ணமானது, குரு, விரணங்கள், கபநோய், அரிப்பு, கிரு விஷம், இவைகளைப்போக்கும், இனி அபினி சொல்லப்படுகிறது இஞ்சி ரசத்தில் 21 தடவை பாவனைசெய்ய அபினி சுத்தமாகு விதிப்படி இதை மருந்து முறைகளில் சேர்க்கலாம். இதன் குண உலரவைக்கும், மலபந்தம் செய்யும், கபஹரம், வாதபித்தங்க செய்யும், மதம், தாஹம், எரிச்சல், சுக்லஸ்தம்பம், இவைகளைச் செய்யும், ஆயாஸம், மயக்கம், இவைகளைக் கொடுக்கும் அதிஸார கிரஹணி, இவைகளில் நன்மைசெய்யும், தீபனம், பாசனம், விட மல் சில நாட்கள் உபயோகித்தால் தலைச்சுற்றலை உண்டுபண்ணும் அல்லது வியாதியைக்கொடுக்கும், கீழே சொன்ன ஒன்பது சரக் களுடன் சேர்த்து அரைத்தால் பாதரசத்தின் ஓடும் தன்மை போ மூகமும் உண்டாகும், தாதுக்களையும் விழுங்கும். கஞ்சா—இத குணம்—பித்தம் செய்யும், கசப்புகுணமுள்ளது, தீக்ஷ்ணம், உ ணம், மலபந்தம் செய்யும், இலகுவானது, பாசன தீபனம், ருசியை கொடுக்கும், மதம்செய்யும், கபவாதஹரம், இதன் சுத்தி—கரு லம்பட்டை கஷாயத்தால் வேகவைத்து உலர்த்தி பசும்பால் பாவனைசெய்து உலர்த்தச் சுத்தியாகும். எல்லாவிஷங்களுக்கு கருடமந்திரம்—ஓம் நம: ப்ரசண்ட கருடாய பக்ஷிராஜாய விஷ்ணு வாஹநாய விநதா ஸுதாய ஹே கருட கச்யபஸுத வைநதே தார்க்ஷ்ய ஸ்வர்ண வஜ்ர சஞ்சு வஜ்ர துண்ட நக ப்ரஹாரணா அனந்த வாஸுகி தக்ஷக கர்கோடக பத்ம மஹாபத்ம சங்கபா குலிக ஜய விஜயாஷ்ட மஹா நாக கால, உச்சாடனீ மூஷகவிஷப் ஹாரணு வஹன தானன சீக்ரகம்ப சீக்ரகம்ப ஆவேச ஆவே டண்டா ஹே ஸ்ரீ கருடாய நம:" மாந்திரகன் இந்த மந்திரத்தா ஏழு தடவை உள்ளங்கை நீரை மந்திரித்து மூர்ச்சையுற்ற விஷத டனைக்குடிக்கச் செய்யவும். ஸர்பவிஷம் முதலியவை விலகு இவ்விதம் மூன்றுதடவை மந்திரித்து நீரைக்குடிக்கச்செய்ய

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |